# <u>கூட்ட நடவடிக்கைகள்</u>

- **ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதி உறுப்பினர் திரு.ஈ.வெ.ரா திருமகன் அவர்களின் மறைவினை ஒட்டி அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மேயர், துணை மேயர், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கனத்த இதயத்துடன் புஷ்பாஞ்சலி மற்றும் புகழஞ்சலி செலுத்தி தங்களது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்தனர்.**

**1.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1ல் வார்டு எண். 1,2,3,4,6,7,13,14,15,16,17,23,24,25,26 ஆகிய 15 வார்டுகளில் சுமார் 46122 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 35 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கமடையாமலும், பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமலும், நோய்த் தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். ஆனால் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசியத்தை கருதி செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்டி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி தூய்மைப் (Other Unskilled Menial) பணிக்கு (SWM) நாள் ஒன்றுக்கு ரூ.707/- என்ற தினக்கூலி அடிப்படையில் 01.10.2022 முதல் 31.12.2022 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.01.2023 முதல் 31.03.2023 முடிய 3 மாத காலத்திற்கு 90 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ. எண் | பணியாளரின் தன்மை | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 205 |

தூய்மைப் பணியாளர்கள் (SWM)

| வ. எண். | பணியாளர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 13% ரூ. | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 205 | 707 | 90 | 1,30,44,150/- | 16,95,740/- | 1,47,39,890/- |

அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட

தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து தூய்மைப் பணியாளர்களுக்கு ஜனவரி-2023, பிப்ரவரி-2023 மற்றும் மார்ச்-2023 ஆகிய மூன்று மாதத்திற்கு ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/791/2022**

**301. அனுமதி வழங்கப்பட்டது.**

**2.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் **-1ல்** வார்டு எண். 1,2,3,4,6,7,13,14,15,16,17,23,24,25,26ஆகிய 15 வார்டுகளில் சுமார் 46122 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 35 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகளை சேகரிக்கவும், தேக்கமடையாமலும், பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமலும், நோய்த் தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு 12 கனரக வாகனங்கள் மற்றும் **31** இலகுரக வாகனங்கள் என மொத்தம் **43** எண்ணிக்கையிலான வாகனங்கள் உள்ளன இவ்வாகனங்களை இயக்குவதற்கு **2** எண்ணிக்கையிலான நிரந்தர ஓட்டுநர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். ஆகவே பற்றாக்குறையாக உள்ள ஓட்டுனர் பணியிடங்களுக்கு தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இவர்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**6492/2022/**எ**2**, நாள்.**30/06/2022**ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள

குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி சுய உதவிக்குழு உறுப்பினர் (Semi-Skilled Labourers) ஓட்டுநர்(Driver) பணிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.745/- என்ற தினக்கூலி அடிப்படையில் 01.10.2022 முதல் 31.12.2022 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.01.2023 முதல் 31.03.2023 முடிய 3 மாத காலத்திற்கு 90 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு ஓட்டுநர் பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | பணியாளரின் தன்மை | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள் (Drivers) | 45 |

ஓட்டுநர்கள் (SWM Vehicles)

| வ.எண். | பணியாளர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 13% ரூ. | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | **45** | **745** | **90** | **30,17,250/-** | **3,92,243/-** | **34,09,493/-** |

அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து ஓட்டுநர் பணியாளர்களுக்கு தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு ஜனவரி-2023, பிப்ரவரி-2023 மற்றும் மார்ச்-2023 ஆகிய மூன்று மாதத்திற்கு ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/791/2022**

**302. அனுமதி வழங்கப்பட்டது.**

**3.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1ல் வார்டு எண். 1,2,3,4,6,7,13,14, 15,16,17,23,24,25,26ஆகிய 15 வார்டுகளிலும் மேற்கொள்ளப்படும் பொது சுகாதாரப்பிரிவு பணிகளான கொசு மற்றும் கொசுப் புழு ஒழிப்பு பணிகள், நோய்த் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. தற்போது பருவமழை தொடங்கியுள்ளதால் கொசுகளின் மூலம் நோய் பரவமால் தடுக்கவும்,

டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். ஆகவே இப்பணியின் அவசியம் கருதி செயல்பாட்டியில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் சட்டம் 1948ன்படி தினக்கூலியாக கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணிக்கு (DBC) நாளொன்றுக்கு 1 நபருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.88/- வீதம் 6 மணி நேரத்திற்கு 6xரூ.88=ரூ.528/- என்ற தினக்கூலி அடிப்படையில் 01.10.2022 முதல் 31.12.2022 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.01.2023 முதல் 28.02.2023 முடிய 2 (இரண்டு) மாத காலத்திற்கு 59 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ. எண் | பணியாளரின் தன்மை | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 63 |

கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC)

| வ.எண். | பணியாளர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 13% ரூ. | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | **63** | **528** | **59** | **1962576/-** | **255135/-** | **22,17,711/-** |

அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கு தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு ஜனவரி-2023, பிப்ரவரி-2023 ஆகிய இரண்டு மாதத்திற்கு ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/791/2022**

**303. அனுமதி வழங்கப்பட்டது.**

**4.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–IIIல் உள்ள **15**–வார்டுகளிலும் சுமார் **48134** குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் **40** மெ.டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொதுசுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய்த் தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**6492/2022**/எ**2**, நாள்.**30.06.2022**ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் **1948**ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள படி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு (SWM) தற்போது நாள் ஒன்றுக்கு ரூ.707/– (தினக்கூலி அடிப்படையில்) ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது **256** நபர்களுக்கு **01.01.2023** முதல் **31.03.2023** முடிய **3** மாத காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமை உள்பட 90 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பணி (SWM) மேற்கொள்ளும் சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு நிர்ணயக்கப்பட்டுள்ள தினக்கூலிக்கான செலவீனத்தை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துப்புரவுப் பணியாளர்கள் (SWM) | 256 |

| வ.எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 256 | SWM 256 x 90 x 707 =1,62,89,280/-<br><br>(12%+1%)<br>13% =21,17,606/- | 1,84,06,886/- |

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30.06.2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி திடக்கழிவு மேலாண்மை பணி (SWM) மேற்கொள்ளும் தினக்கூலி பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலியினை

நிர்ணயம் செய்து ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச்–2023 ஆகிய மூன்று மாதத்திற்கு வழங்குவதற்கும் அதனால் ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டமைக்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2200/2020/எச்1/ம3**

## 304. **அனுமதி வழங்கப்பட்டது.**

**5.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–IIIல் உள்ள 15–வார்டுகளிலும் சுமார் 48134 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொதுசுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய்த் தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு உருவாகும் 40 மெ.டன் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு மொத்தம் 49 வாகனங்கள் உள்ளது. ஆனால் நிரந்தர ஓட்டுநர்கள் நான்கு பேர் மட்டுமே உள்ளனர். ஆகவே இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான ஓட்டுனர்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30.06.2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள படி சுய உதவிக்குழு (Driver)

ஓட்டுநர் (Semi-Skilled Labourers-Driver) நாள் ஒன்றுக்கு ரூ.745/- (தினக்கூலி அடிப்படையில்) ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 44 நபர்களுக்கு 01.01.2023 முதல் 31.03.2023 முடிய 3 மாத காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமை உள்பட 90 நாட்களுக்கு ஓட்டுநர் பணி (Driver) மேற்கொள்ளும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நிர்ணயக்கப்பட்டுள்ள தினக்கூலிக்கான செலவீனம் கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள் (Drivers) | 44 |

| வ.எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள் (Drivers) | 44 | 44 X 90 X 745 =2950200/- (12%+1%) 13% = 383526/– | **3333726/–** |

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30.06.2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி ஓட்டுநர் பணி மேற்கொள்ளும் தினக்கூலி பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலியினை நிர்ணயம் செய்து ஜனவரி, பிப்ரவரி

மற்றும் மார்ச்–2023 ஆகிய மூன்று மாதத்திற்கு வழங்குவதற்கும் அதனால் ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டமைக்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2200/2020/எச்1/ம3**

**305. அனுமதி வழங்கப்பட்டது.**

**6.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–IIIல், 15–வார்டுகளில் மொத்தம் 48134 குடியிருப்புகள் உள்ளது. இங்கு குடியிருப்பு பகுதிகளில் பொது சுகாதார பணிகளான டெங்கு தடுப்பு (DBC) பணிகளை மேற்கொள்வதற்கு பணியாட்கள் இல்லை. தற்போது வடக்கிழக்கு பருவமழையை தொடர்ந்து ஏடிஸ் கொசுக்களின் பெருக்கம் ஏற்படும், ஆகவே டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது அவசியமாகும். ஆகவே இப்பணிகளின் அவசியம் கருதி டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு, தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30.06.2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து நாள் ஒன்றுக்கு (பகுதி நேரம்) ரூ.528/– என்ற தினக்கூலி அடிப்படையில் கணக்கிட்டு வழங்கப்படுகிறது. தற்போது 58

நபர்களுக்கு 01.01.2023 முதல் **28**.02.2023 முடிய **2** மாத காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமை உள்பட 59 நாட்களுக்கு (பகுதி நேரம்) நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலிக்கான செலவினம் கீழ்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டெங்கு தடுப்பு (DBC) | 58 |

| வ.எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய (பகுதி நேரம்) தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | டெங்கு தடுப்பு (DBC) | 58 | DBC 58 x 59 x 528 =1806816/-<br><br>(12%+1%) 13% =2,34,886/- | 20,41,702/- |

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**6492/2022**/எ2, நாள்.**30.06.2022**ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் **1948**ன் படி டெங்கு தடுப்பு (DBC) பணிகளை மேற்கொள்ளும் தினக்கூலி பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள (பகுதி நேரம்) தினக்கூலியினை நிர்ணயம் செய்து டெங்கு தடுப்பு (DBC) பணியாளர்களுக்கு ஜனவரி மற்றம்

பிப்ரவரி 2023 ஆகிய இரண்டு மாதத்திற்கு வழங்குவதற்கும், அதனால் ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டமைக்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்./2200/எச்1/ம3**

**306. அனுமதி வழங்கப்பட்டது.**

**7.)** தூய்மை பாரத இயக்கம் (நகர்புறம்)2.0 திட்டத்தின் கீழ் 25 உள்ளாட்சிகளில் 44 எண்ணிக்கையிலான நுண்ணுயிர் உரக்கூடங்கள் (Micro Compost Center) கட்டிக்கொள்ள ரூ.26.91 கோடியை மாநில அளவிலான 4-வது உயர் அதிகாரகுழு கூட்டத்தில் (4th SHPC) ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாகவும் அதில் ஈரோடு மாநகராட்சிக்கு 4 எண்ணிக்கை நுண்ணுயிர் உரக்கூடங்கள் (MCC) கீழ்கண்ட நிதி ஆதரத்தின்படி கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 20860/2020/SBM, நாள்: 05.12.2022-ன் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு.

| Sl. No | Name of ULB | Funding Pattern | No. of Works | Amount Rs in Crore | Central Share | State Share | ULB Share |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 33% | 22% | 45% |
| 1. | Erode | Central Share -33%<br>State Share -22%<br>ULB Share -45% | 4 | 2.30 | 0.759 | 0.506 | 1.035 |

அதனைத் தொடர்ந்து இம்மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட இடங்களில் நுண்ணுயிர் உரக்கூடங்கள் அமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு.

| Sl.No | Name of Work | Estimate Amount (Rs in Lakhs) |
|---|---|---|
| 1. | Construction of 5 TPD Micro Compost Centre at Vairapalayam in Zone-1. | 57.50 |
| 2. | Construction of 5 TPD Capacity Micro Compost Centre at Vandipalayam in Ward No.60 of Zone-4. | 57.50 |
| 3. | Construction of 5 TPD Capacity Micro Compost Centre-2 at Vandipalayam in Ward No.60 of Zone-4. | 57.50 |
| 4. | Construction of 5 TPD Capacity Micro Compost Centre at Mohon Thottam in Ward No.60 of Zone-4. | 57.50 |

எனவே SBM 2.O திட்டத்தின் கீழ் 2022-23-ம் ஆண்டிற்கு இம்மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஆதாரங்களின் படி மேற்கண்டவாறு நான்கு இடங்களில் புதிய நுண்ணுயிர் உரக்கூடங்களை புதியதாக கட்டி பயன்பாட்டிற்கு கொண்டு வர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுதிக்கலாம்.

2. இப்பணி திட்டப்பணியாக உள்ளதால் உரிய வழிமுறைகளை பின்பற்றி உடனடியாக பணிகள் துவக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1/8271/2022**

**307. அனுமதி வழங்கப்பட்டது.**

**8.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -2ல் வார்டு எண். 5,8,9,11,12,18,20, 21,22,27,28,29,35,36,37 ஆகிய 15 வார்டுகளில் சுமார் 58177 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. மேலும் பேருந்துநிலையம் தினசரி காய்கறி சந்தை வ.உ.சி பூங்கா வழிபாட்டு தலங்கள் மற்றும் முக்கிய வணிகப்பகுதிகள் என பொதுமக்கள் அதிக அளவில் கூடும் பகுதிகள் இம்மண்டலத்தில் அமைந்துள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 70மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கமடையாமலும், பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமலும், நோய்த் தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். ஆனால் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசியத்தை கருதி செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்டி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி தூய்மைப் (Other Unskilled Menial) பணிக்கு (SWM) நாள்

ஒன்றுக்கு ரூ.707/- என்ற தினக்கூலி அடிப்படையில் **01.10.2022** முதல் **31.12.2022** முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் **01.01.2023** முதல் **31.03.2022** முடிய **3** மாத காலத்திற்கு **92** நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ.எண் | பணியாளரின் தன்மை | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 310 |

## தூய்மைப் பணியாளர்கள் (SWM)

| வ. எண். | பணியாளர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 13% ரூ. | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 310 | 707 | 90 | 19725300/– | 2564289/– | 22289589/- |

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**6492/2022**/எ2, நாள்.**30/06/2022**ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் **1948**ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி

நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து தூய்மைப் பணியாளர்களுக்கு ஜனவரி-2023, பிப்ரவரி-2023 மற்றும் மார்ச்-2023 ஆகிய மூன்று மாதத்திற்கு ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1014/2022/எச்1/ம2**

**308. அனுமதி வழங்கப்பட்டது.**

**9.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -2ல் வார்டு எண். 5,8,9,11,12,18,20,21, 22,27,28,29,35,36,37 ஆகிய 15 வார்டுகளில் சுமார் 58177 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. மேலும், பேருந்து நிலையம், தினசரி காய்கறி சந்தை, வ.உ.சி.பூங்கா வழிபாட்டு தலங்கள் மற்றும் முக்கிய வணிகப்பகுதிகள் என பொதுமக்கள் அதிக அளவில் கூடும் பகுதிகள் இம்மண்டலத்தில் அமைந்துள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 70 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகளை சேகரிக்கவும், தேக்கமடையாமலும், பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமலும், நோய்த் தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு 18 கனரக வாகனங்கள், 31 இலகுரக வாகனங்கள், அலுவலக வாகனங்கள் 7 என மொத்தம் 56 எண்ணிக்கையிலான வாகனங்கள் உள்ளன. மேலும் வணிகப் பகுதிகளில் மாலை மற்றும் இரவு நேரங்களில் திடக்கழிவுகளை சேகரிப்பதற்கு பயன்பாட்டில் உள்ள வாகனங்களில் 12 வாகனங்கள் கூடுதலாக இயக்கப்பட்டு கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது. மேற்கண்ட அனைத்து வாகனங்களை இயக்குவதற்கு 3 எண்ணிக்கையிலான நிரந்தர ஓட்டுநர்கள் மட்டுமே பணியில் உள்ளனர்.

ஆகவே பற்றாக்குறையாக உள்ள ஓட்டுனர் பணியிடங்களுக்கு தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இவர்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி சுய உதவிக்குழு உறுப்பினர் (Semi-Skilled Labourers) ஓட்டுநர்(Driver) பணிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.745/- என்ற தினக்கூலி அடிப்படையில் 01.10.2022 முதல் 31.12.2022 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.01.2023 முதல் 31.03.2023 முடிய 3 மாத காலத்திற்கு 92 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு ஓட்டுநர் பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ.எண் | பணியாளரின் தன்மை | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள் (Drivers) | 62 |

ஓட்டுநர்கள் (SWM Vehicles)

| வ.எண். | பணியாளர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 13% ரூ. | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 62 | 745 | 90 | 4157100/– | 540423/– | 4697523/- |

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து ஒட்டுநர் பணியாளர்களுக்கு தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு ஜனவரி-2023, பிப்ரவரி2023 மற்றும் மார்ச்-2023 ஆகிய மூன்று மாதத்திற்கு ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1014/2022/எச்1/மை2**

**309. அனுமதி வழங்கப்பட்டது.**

**10.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -2ல் வார்டு எண். **5,8,9,11,12,18, 20,21,22,27,28,29,35,36,37** ஆகிய 15 வார்டுகளிலும் மேற்கொள்ளப்படும் பொது சுகாதாரப்பிரிவு பணிகளான கொசு மற்றும் கொசுப் புழு ஒழிப்பு பணிகள், நோய்த் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. தற்போது பருவமழை தொடங்கியுள்ளதால் கொசுகளின் மூலம் நோய் பரவமால் தடுக்கவும், டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். ஆகவே இப்பணியின் அவசியம் கருதி செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு

உறுப்பினர்கள் மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் சட்டம் 1948ன்படி தினக்கூலியாக கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணிக்கு (DBC) நாளொன்றுக்கு 1 நபருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.88/- வீதம் 6 மணி நேரத்திற்கு 6xரூ.88=ரூ.528/- என்ற தினக்கூலி அடிப்படையில் 01.10.2022 முதல் 31.12.2022 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.01.2023 முதல் 28.02.2023 முடிய 2 மாத காலத்திற்கு 59 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ.எண் | பணியாளரின் தன்மை | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 54 |

கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC)

| வ.எண். | பணியாளர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 13% ரூ. | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 54 | 528 | 59 | 1682208/– | 218687/– | 1900895/– |

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கு தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு ஜனவரி-2023, பிப்ரவரி2023 மற்றும் மார்ச்-2023ஆகிய மூன்று மாதத்திற்கு ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1014/2022/எச்1/மெ2**

**310. அனுமதி வழங்கப்பட்டது.**

**11.)** அரசு ஆணை (நிலை) எண்.373, நிதி(படிகள்)த் துறை, நாள்.26.12.2022ல், 2021–2022ஆம் கணக்காண்டிற்கு ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு சார்ந்த, முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப்பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் / பணியாளர்கள் ஆகியோருக்கு

திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில் ரூ.3,000/– என்ற உச்சவரம்பிற்குட்பட்டு தற்காலிக மிகை ஊதியமாக வழங்கிட அரசு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 2021–2022ஆம் கணக்காண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்த சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிலையான ஊதியம் பெற்று வந்த முழு நேர மற்றும் பகுதி நேரப்பணியாளர்கள், தொகுப்பூதியம் பெற்று வந்த பணியாளர்கள், தொகுப்பூதியம் / சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வந்த சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள்), கிராம உதவியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் ஒரு பகுதி தினக்கூலிகளாக பணியாற்றி பின்னர் தொடர்ந்து நிரந்தர பணியாளர்களாக பணியாற்றியவர்களுக்கும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் ரூ.1,000/– வழங்கி அரசு ஆணையிடப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். தற்காலிக மிகை ஊதியத்திற்கான செலவினம் சுமார் ரூ.22,00,000-ற்கு அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.சி2-0108-2022**

**311. அனுமதி வழங்கப்பட்டது.**

**12.)** அரசாணை (நிலை) எண்.374, நிதி(படிகள்)த் துறை, நாள்.26.12.2022 ல், 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வு பெற்ற ('சி' மற்றும் 'டி' பிரிவு ஊதிய விகிதங்கள் (சாதாரண நிலை) ) மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து 'சி' மற்றும் 'டி' பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc Pensioners of all categories) (அதாவது 01.10.2017 முதல் சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2,000/– பெறும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், குறுஅங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள், ஊராட்சி செயலர், கிராம நூலகர்கள், பெருக்குபவர்கள் / துப்புரவு பணியாளர்கள் / துப்புரவாளர்கள், தோட்டக்காவலர், வேட்டைத் தடுப்பு காவலர், காவல்நிலைய துப்புரவாளர்கள் மற்றும் ஆயா உட்பட) மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும் / பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும் ஒட்டு மொத்த பொங்கல் பரிசுத்தொகையாக ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையின் படி தற்காலிக ஓய்வூதியம் பெறும் அனைத்து 'சி' மற்றும் 'டி' ஓய்வூதியதாரார்களுக்கும் பொருந்தும். இந்த பொங்கல் பரிசுத்தொகை 26.12.2022 நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் 01.01.2022 வரையிலான கால அளவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள

பணியிலிருக்கையில் இறந்துவிட்டவர்களைப் பொருத்தவரையில், அவர்களுக்கு தற்காலிக மிகை ஊதியம் வழங்கப்பட்டிருக்குமேயாயின், அவர்கள் இந்த பொங்கல் பரிசுத் தொகையை பெற தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள் என ஆணையிடப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். தற்காலிக மிகை செலவினம் தொகைக்கு அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். பி4-118-2023**

**312. அனுமதி வழங்கப்பட்டது.**

**13.)** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றம் பேரவை விதி எண். 110-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் அரசாணை (நிலை) எண். 43 சமுகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை நாள். 27.07.2022 உத்திரவின்படி முதல் கட்டமாக ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 26 எண்ணிக்கை மாநகராட்சி மற்றும் அரசு தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு பள்ளி வேலை நாட்களில் காலை உணவு வழங்குதல் திட்டம் 16.09.2022 தேதி முதல் செயல்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்கண்டவாறு வழங்கப்படும் காலை உணவினை பரிமாறுவதற்கு 100 மாணவ

மாணவியிருக்கு ஒரு நபர் வீதம் தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/மநஅ2, நாள்: 02.11.2022 கடிதத்தில் மேற்கண்டவாறு உணவு பரிமாறுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள தன்னார்வலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1500/- கவுரவ ஊதியமாக (Honorarium) கல்வி நிதி மற்றும் வருவாய் நிதியிலிருந்து வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஈரோடு மாநகராட்சியில் காலை உணவு பரிமாறுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள 38 தன்னார்வலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் நபர் ஒன்றுக்கு ரூ.1,500/- வீதம் கவுரவ ஊதியமாக வழங்க பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாநகராட்சி கல்வி நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தன்னார்வலர்களுக்கு தொகை வழங்கியமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். சி6-4674-2022**

**313. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**14.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஊராட்சிக்கோட்டை தனிக்குடிநீர்த் திட்ட குழாய்கள் அமைத்தல், பாதாள சாக்கடை திட்ட பணிகள் முடிவுற்று சேதமடைந்த சாலைகள், புதை மின்வடம் அமைத்தல் ஆகிய பணிகளால் சேதமடைந்த சாலைகளில் 38.05 கி.மீ நீள சாலைகள் சீரமைப்பு செய்யும் பணி சிறப்பு சாலைத் திட்டத்தின் கீழ் சிறப்பு சாலைத் திட்ட நிதி ரூ.12.60 கோடியும் உள்ளாட்சிகளின் பங்கு ரூ.1.40 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.14.00 கோடியில் மேற்கொள்ள மாமன்ற தீர்மான எண்.265, நாள்:11.12.2020-ன் ஒப்புதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20557/2020/E3, நாள்:16.12.2020-ன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உரிய வழிமுறைகளின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான கடன் ஒப்பந்தத்தில் (Loan Agreement) ரூ.12.60 கோடிக்கு ஓராண்டிற்கு 7.95% வட்டி எனக் கணக்கிட்டு 10 ஆண்டுகளுக்குள் கடன் தொகையை திருப்பிச் செலுத்த ஒப்பந்தம் போடப்பட்டு முதல் தவணையாக ரூ.6.30 கோடி கடன் விடுவிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், TUFIDCO, சென்னை அவர்களின் கடிதம் எண்.TUFIDCO/SRP/ERODE/M(B)/2022, நாள்.28.11.2022-ல் மேற்படி சிறப்பு சாலைத் திட்டத்திற்கு ஸ்டேட் வங்கி மற்றும் இந்தியன் வங்கியிலிருந்து கடன் பெற்று வழங்கியுள்ளது. இக்கடனுக்கான மேற்படி வங்கிகளுடன் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி நடப்பு காலத்திற்கு ஆண்டு

வட்டி விகிதம் (Floating) 8.65% ஆக மாற்றம் அடைந்துள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சிக்கு வழங்கப்படும் கடனுக்கும் ஆண்டுக்கு 8.65% வட்டி விகிதம் வசூலிக்க வேண்டியுள்ளது எனவும் அதன்படி ஒரு காலாண்டிற்கு தோராய தவணையாக ரூ.64.31 இலட்சம் செலுத்தப்பட வேண்டும் எனவும் மேற்படி திருத்திய வட்டி விகிதத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சிறப்பு சாலைத் திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ள நிலையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்படாமல் உள்ளது. எனவே இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் தொகை ரூ.12.60 கோடிக்கு திருத்திய வட்டி விகிதம் ஆண்டுக்கு 8.65%-ஐ ஏற்று மேற்படி கடன் தொகையை பெறுவதற்கும் அதற்குரிய தவணைகளைச் செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:இ1/4888/2020**

**314. அனுமதி வழங்கப்பட்டது.**

**15.)** இந்திய தொழில் கூட்டமைப்பு(CII) அரசு சார்பற்ற, லாப நோக்கமற்ற மற்றும் தொழில் நிறுவன மேலாண்மை ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்ட அமைப்பாக உள்ளது. இந்த அமைப்பின் இணை அமைப்பாக Young Indians (YI) அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு நவீன இந்தியாவாக உருவெடுக்கும் திட்டங்களை மேற்கொள்ள முனைப்பாக கொண்டுள்ளது.

ஈரோடு Young India அமைப்பானது இந்தியாவில் உள்ள 58 நகரங்களில் முதன்மையானதாக உள்ளது. இந்த அமைப்பு மூலம் பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பை மையமாகக் கொண்டு "மாசூம்" (Masoom) என்ற இயக்கம் மூலம் ஆண்டு தோறும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் பள்ளிக் குழந்தைகள் பாதுகாப்பு, தலைமைப்பண்பு, கூட்டு முயற்சி போன்ற பண்புகளை மேம்படுத்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் 25 தனியார் பள்ளிகளில் சுமார் 20,000 மாணவ மாணவிகளுக்கு "மாசூம்" (Masoom) இயக்கம் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதனை கருத்தில் கொண்டு மேற்கண்ட "மாசூம்" (Masoom) இயக்கத்தின் மூலம் ஈரோடு மாநகராட்சி பள்ளிக் குழந்தைகளுக்கு அடுத்த

ஓராண்டிற்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் வழங்கும் பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

எனவே ஈரோடு மாநகராட்சி பள்ளிகளில் Young India-வின் "மாசூம்" (Masoom) அமைப்பு மூலம் பள்ளி மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் நடத்தவும் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:இ1/8386/2022**

**315. அனுமதி வழங்கப்பட்டது.**

**16.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகைகள் மற்றும் கூடுதல் வைப்புத் தொகைகள், மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபணை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திருவாளர். திருவாளர். எஸ்.வி.&கோ அவர்கள் விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

திருவாளர். எஸ்.வி. & கோ

| வ.எண். | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி | | | | |
| 1. | EE | 2016-2017 | 49 | 22,463.00 |
| 2. | EE | 2016-2017 | 47 | 1,84,793.00 |
| 3. | EE | 2016-2017 | 47 | 99,285.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | EE | 2016-2017 | 42 | 17,000.00 |
| 3. | EE | 2016-2017 | 41 | 24,279.00 |
| 3. | EE | 2015-2016 | 38 | 2,500.00 |
| | | | **Total** | **3,50,320.00** |

மேற்கண்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங் கடந்த வைப்புத் தொகை கல்வி நிதி தொகை ரூ.3,50,320/-ஐ திருவாளர். எஸ்.வி. & கோ அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

காலங் கடந்த வைப்புத் தொகை திருவாளர். எஸ்.வி. & கோ அவர்களுக்கு கல்வி நிதி தொகை ரூ.3,50,320/-ஐ திருப்பி வழங்கலாம்.

**ந.க.எண்.பி3-3421-2017**

**316. அனுமதி வழங்கப்பட்டது.**

**17.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II வார்டுஎண்: 28-க்குட்பட்ட முனிசிபல் காலனி மெயின்ரோடு பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் ஊராட்சிக் கோட்டை குடிநீர் திட்ட பணிகளுக்காக குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் செய்ய ஏதுவாக சாலைகளில் குழிகள் தோண்டப்பட்டுள்ளது. தற்போது குழாய்கள் பதிக்கும் பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டு சாலை மிகவும் சேதமடைந்து மேடுபள்ளமாக உள்ளதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் கோரிக்கையின் படி இச்சாலையினை முழுவதுமாக சீரமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேசமதிப்பீட்டுதொகை ரூ.10.20/-லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

01. அனுமதி வழங்கலாம்.

**கோப்புஎண் :- இ1/ /2022**

**317. அனுமதி வழங்கப்பட்டது.**

**18.)** இம்மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கும் தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள்.25.01.2018ன் அடிப்படையில் 2017-18 இரண்டாம் அரையாண்டு முதல் புதிதாக அளவீடு செய்து வரிவிதிக்கப்பட்டது. அவ்வாறு வரிவிதிப்பு செய்யப்பட்டதில், மண்டலம்-3ற்குட்பட்ட திண்டல் BVB மெட்ரிகுலேசன் பள்ளி, BVB கிராம மாணவர் கல்விக் கழகம், தெற்குப்பள்ளம் மற்றும் சூரம்பட்டி EVN ரோடு கிட்ஸ் ஸ்கூல் ஆகியவைகளுக்கு 2017-18 இரண்டாம் அரையாண்டு முதல், ஏற்கனவே திண்டல் பஞ்சாயத்து மற்றும் ஈரோடு நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட பழைய வரித் தொகையினை நீக்கம் செய்யப்படாமல், புதிதாக அளவீடு செய்யப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்ட வரித்தொகையும் இன்று வரை செலுத்தப்படாமல் நிலுவையாக இருந்து வருகின்றது. இதனால் வரிவிதிப்பாளர் பழைய வரித்தொகையினை இது வரையிலும் 2021-2022 முடிய செலுத்தி வருகிறார். வரிவிதிப்பாளர் 25.01.2018ம் தேதிய தமிழ்நாடு அரசிதழின்படி புதிதாக நிர்ணயம் செய்யப்பட்ட வரித்தொகையினை செலுத்தாமல் இன்று வரை நிலுவையாக வைத்துள்ளார்.

எனவே, ஏற்கனவே நீக்கம் செய்யப்படாமல் இருந்த பழைய வரிவிதிப்பினை 2022-2023 முதலாம் அரையாண்டு முதல் மாதாந்திர பட்டியல் மூலம் நிரந்தரமாக நீக்கம் செய்யலாம். தற்பொழுது 25.01.2018ம் தேதிய

அரசிதழின்படி திண்டல் BVB மெட்ரிக் பள்ளிக்கு புதிதாக நிர்ணயம் செய்யப்பட்ட 25 வரிவிதிப்புகளும், BVB கிராம மாணவர் கல்விக் கழகம் தெற்குப்பள்ளம் பள்ளிக்கு 5 வரிவிதிப்புகளும், சூரம்பட்டி EVN ரோடு BVB கிட்ஸ் பள்ளிக்கு 1 வரிவிதிப்பும் ஆகிய வரிவிதிப்புகளுக்கு 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் நிர்ணயம் செய்யப்பட்டு இன்று வரையிலும் நிலுவையாக உள்ள மொத்த நிலுவை வரித் தொகை ரூ.1,24,68,820/-ல் ஏற்கனவே செலுத்தப்பட்ட மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பள்ளிகளுக்கும் வரிவிதிப்பு உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ள 2017-18 இரண்டாம் அரையாண்டு முதல் 2021-2022 ஆண்டு முடிய உள்ள பழைய சொத்துவரித் தொகை ரூ.29,59,074/-ஐ வரிவிதிப்பாளரால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை வரித் தொகைக்கு ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் புதிதாக அளவீடு செய்து நிர்ணயம் செய்யப்பட்ட 25 வரிவிதிப்புகளில் அங்குள்ள விளையாட்டு மைதானம் அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வண்டி வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு 4 வரிவிதிப்புகள் தவறுதலாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதில் சுற்றுச்சுவர் இல்லாமலே மேற்கூரை மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. அவ்வாறு தவறுதலாக நிர்ணயம் செய்யப்பட்ட நான்கு வரிவிதிப்புகளையும் '(வரிவிதிப்பு எண்.056/030/903049, 903050, 903051, 903052) 2017-18ம் இரண்டாம் அரையாண்டு முதல் 2022-23 இரண்டாம் அரையாண்டு முடிய நிரந்தரமாக வரிவிதிப்பினை ரத்து செய்திடவும், அதற்குண்டான கேட்பு தொகை முழுவதையும் கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.அ1-1907-2022**

**318. அனுமதி வழங்கப்பட்டது.**

**19.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.1 செங்குந்தபுரம் நடுநிலைப்பள்ளி அருகில் குமிளம்பரப்பு ரீ.ச.எண்.72/1-ல் பாழடைந்த கிணறு உள்ளது. மேற்படி கிணறானது பொதுமக்களுக்கு பயன்பாடன்றி உள்ளது. இக்கிணற்றின் பக்க சுவர்கள் சரிந்துள்ளதால் பள்ளிக் கட்டிடத்தின் அஸ்திவாரம் பாதிப்பினை ஏற்படுத்தும் நிலையில் உள்ளதால் பள்ளிக்கூட கட்டிடத்தில் முதல் தளம் அமைக்க இயலாமல் உள்ளது. மேலும் போக்குவரத்து இடையுராகவும், பொதுமக்களுக்கும் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு பாதுகாப்பின்றி, ஆபத்து விளைவிக்க கூடிய நிலையில் உள்ளதால் மேற்படி கிணற்றை மூட செங்குந்தபுரம் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பள்ளி கட்டிட பாதுகாப்பு கருதியும் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி கிணற்றை மண் நிரப்பி சமன் செய்து அவ்விடத்தை பசுமை இடமாக பராமரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-1305-2022**

**319. அனுமதி வழங்கப்பட்டது.**

**20.)** இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொது அறிவு மற்றும் போட்டித் தேர்வுத் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டு தினகரன் நாளிதழ் நிறுவனத்தாரின் 28.12.2022ந் தேதிய கடிதத்தில் கோரியுள்ளவாறு கிழே குறிப்பிட்டுள்ள விவரப்படி ஜனவரி 2023 முதல் மார்ச் 2023 முடிய 60 நாட்களுக்கு தினகரன் நாளிதழ் விநியோகம் செய்யவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25000–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பள்ளியின் பெயர் | ஒரு நாளைக்கு வழங்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | பள்ளியில் பயிலுபவர் விபரம் | மொத்தம் வழங்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 09.01.2023 To 31.01.2023 17 நாட்கள் | 01.02.2023 20 நாட்கள் | 01.03.2023 23 நாட்கள் |
| 1 | விநாயகர் கோவில் வீதி (மா.ஆ.ப) | 1 | 160 நபர்கள் | 17 | 20 | 23 |
| 2 | கங்காபுரம்(மா.ஆ.ப) | 1 | 20 நபர்கள் | 17 | 20 | 23 |
| 3 | கொளத்துபாளையம்(மா.ஆ.ப) | 1 | 24 நபர்கள் | 17 | 20 | 23 |
| 4 | பெரிய வலசு(மா.ஆ.ப) | 1 | 291 நபர்கள் | 17 | 20 | 23 |
| 5 | ராஜாஜிபுரம்(மா.ஆ.ப) | 1 | 66 நபர்கள் | 17 | 20 | 23 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | வீரப்பன்சத்திரம்(மா.ஆ.ப) | 1 | 693 | 17 | 20 | 23 |
| 7 | செம்மாம்பாளையம்(மா.ஆ.ப) | 1 | 15 நபர்கள் | 17 | 20 | 23 |
| 8 | வில்லரசம்பட்டி(மா.ஆ.ப) | 1 | 30 நபர்கள் | 17 | 20 | 23 |
| 9 | வீரப்பம்பாளையம்(மா.ஆ.ப) | 1 | 61 நபர்கள் | 17 | 20 | 23 |
| 10 | காரபாறை(மா.ஆ.ப) | 1 | 43 நபர்கள் | 17 | 20 | 23 |
| 11 | முத்தம்பாளையம்(மா.ஆ.ப) | 1 | 54 நபர்கள் | 17 | 20 | 23 |
| 12 | இரங்கம்பாளையம்(மா.ஆ.ப) | 1 | 30 நபர்கள் | 17 | 20 | 23 |
| 13 | நல்லியம்பாளையம்(மா.ஆ.ப) | 1 | 36 நபர்கள் | 17 | 20 | 23 |
| 14 | பழையபாளையம்(மா.ஆ.ப) | 1 | 26 நபர்கள் | 17 | 20 | 23 |
| 15 | அணைகட்டு(மா.ஆ.ப) | 1 | 33 நபர்கள் | 17 | 20 | 23 |
| 16 | இரயில்வே காலனி(மா.ஆ.ப) | 1 | 161 நபர்கள் | 17 | 20 | 23 |
| 17 | கொல்லம்பாளையம்(மா.ஆ.ப) | 1 | 198 நபர்கள் | 17 | 20 | 23 |
| 18 | பாலசுப்புராயுலு வீதி(மா.ஆ.ப) | 1 | 47 நபர்கள் | 17 | 20 | 23 |
| 19 | பெரியார் வீதி(மா.ஆ.ப) | 1 | 314 நபர்கள் | 17 | 20 | 23 |
| 20 | குமிளம்பரப்பு(மா.ஆ.ப) | 1 | 25 நபர்கள் | 17 | 20 | 23 |
| 21 | சமத்துவபுரம்(மா.ஆ.ப) | 1 | 21 நபர்கள் | 17 | 20 | 23 |
| 22 | பெரியமாரியம்மன் கோவில் வீதி(மா.ஆ.ப) | 1 | 72 நபர்கள் | 17 | 20 | 23 |
| 23 | வளையகார வீதி(மா.ஆ.ப) | 1 | 33 நபர்கள் | 17 | 20 | 23 |
| 24 | கச்சேரி வீதி(மா.ஆ.ப) | 1 | 23 நபர்கள் | 17 | 20 | 23 |
| 25 | ஓடகாட்டு வலசு(மா.ஆ.ப) | 1 | 172 நபர்கள் | 17 | 20 | 23 |
| 26 | இராயபாளையம் பூதுர்(மா.ஆ.ப) | 1 | 133 நபர்கள் | 17 | 20 | 23 |
| 27 | காவேரி கரைCPS | 1 | 25 நபர்கள் | 17 | 20 | 23 |
| 28 | சொட்டையம்பாளையம்(மா.ஆ.ப) | 1 | 17 நபர்கள் | 17 | 20 | 23 |
| 29 | சொக்காயி தோட்டம் (மா.ஆ.ப) | 1 | 70 நபர்கள் | 17 | 20 | 23 |
| 30 | காமராஜ் வீதி (மா.ஆ.ப) | 1 | 80 நபர்கள் | 17 | 20 | 23 |
| 31 | செங்குந்தபுரம்(மா.ந.ப) | 1 | 245 | 17 | 20 | 23 |
| 32 | பெருமாள் மலை (மா.ந.ப) | 1 | 203 | 17 | 20 | 23 |
| 33 | இந்திராபுரம் (மா.ந.ப) | 1 | 224 | 17 | 20 | 23 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 34 | வைராபாளையம் (மா.ந.ப) | 1 | 168 நபர்கள் | 17 | 20 | 23 |
| 35 | அசோகபுரம் (மா.ந.ப) | 1 | 121 நபர்கள் | 17 | 20 | 23 |
| 36 | திருநகர் காலனி (மா.ந.ப) | 1 | 282 நபர்கள் | 17 | 20 | 23 |
| 37 | எல்லபாளையம் (மா.ந.ப) | 1 | 189 நபர்கள் | 17 | 20 | 23 |
| 38 | கொங்கம்பாளையம் (மா.ந.ப) | 1 | 183 நபர்கள் | 17 | 20 | 23 |
| 39 | தண்ணீர்பந்தல் பாளையம் (மா.ந.ப) | 1 | 212 நபர்கள் | 17 | 20 | 23 |
| 40 | EBP நகர் (மா.ந.ப) | 1 | 475 | 17 | 20 | 23 |
| 41 | SSP நகர் (மா.ந.ப) | 1 | 110 நபர்கள் | 17 | 20 | 23 |
| 42 | மாணிக்கம்பாளையம் (மா.ந.ப) | 1 | 586 நபர்கள் | 17 | 20 | 23 |
| 43 | காவேரி ரோடு (மா.ந.ப) | 1 | 526 நபர்கள் | 17 | 20 | 23 |
| 44 | டீச்சர்ஸ் காலணி (மா.ந.ப) | 1 | 309 | 17 | 20 | 23 |
| 45 | SKC ரோடு (மா.ந.ப) | 1 | 233 நபர்கள் | 17 | 20 | 23 |
| 46 | மோளகவுண்டன்பாளையம் (மா.ந.ப) | 1 | 219 நபர்கள் | 17 | 20 | 23 |
| 47 | ஜவுளி நகர் (மா.ந.ப) | 1 | 371 நபர்கள் | 17 | 20 | 23 |
| 48 | B.Pஅக்ரஹாரம் (மா.ந.ப) | 1 | 241 நபர்கள் | 17 | 20 | 23 |
| 49 | சு.கா.வலசு (மா.ந.ப) | 1 | 220 | 17 | 20 | 23 |
| 50 | இரயில்வே காலணி (மா.ந.ப) | 1 | 247 | 17 | | |
| 51 | பெரியவலசு(மா.உ.ப) | 1 | 339 | 17 | 20 | 23 |
| 52 | இடையன்காட்டு வலசு(மா.உ.ப) | 1 | 935 | 17 | 20 | 23 |
| 53 | சின்னசேமூர் (மா.உ.ப) | 1 | 750 நபர்கள் | 17 | 20 | 23 |
| 54 | செங்கோடம்பாளையம் (மா.உ.ப) | 1 | 160 நபர்கள் | 17 | 20 | 23 |
| 55 | நஞ்சப்பன்கவுண்டன்வலசு (மா.உ.ப) | 1 | 793 நபர்கள் | 17 | 20 | 23 |
| 56 | காமராஜ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி(மா.மே.ப) | 5 | 269 | 17 | 20 | 23 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 57 | இரயில்வே மேல்நிலைப் பள்ளி(மா.மே.ப) | 5 | 641 நபர்கள் | 17 | 20 | 23 |
| 58 | கருங்கல்பாயைம்பெண்கள் மேல்நிலைப் பள்ளி(மா.மே.ப) | 5 | 694 | 17 | 20 | 23 |
| 59 | குமலன்குட்டை(மா.மே.ப) | 5 | 616 நபர்கள் | 17 | 20 | 23 |
| 60 | திண்டல் (மா.மே.ப) | 5 | 779 நபர்கள் | 17 | 20 | 23 |
| 61 | காசிபாளையம் (மா.மே.ப) | 5 | 585 நபர்கள் | 17 | 20 | 23 |
| 62 | R.N புதுர் (மா.மே.ப) | 5 | 412 நபர்கள் | 17 | 20 | 23 |
| **மொத்தம்** | | **90** | **15310** | **1054** | **1240** | **1426** |

மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மேற்கண்டுள்ள விவரப்படி ஜனவரி 2023 முதல் மார்ச்2023 வரையான 60 நாட்களுக்கு தினகரன் நாளிதழ் விநியோகம் செய்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25000–க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2.அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.டி2-8764-2022**

**320. அனுமதி வழங்கப்பட்டது.**

**21.)** இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டிற்கான அரசாணை எண்.249 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 11-12-2018 ன் வாயிலாக ரூ.209.22 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மாநகராட்சியில் பாதாளசாக்கடை திட்டத்தை செயல்படுத்த KfW திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து பணிநடைபெற்று வருகிறது. மேலும் மேற்படி திட்டப் பணியில் 5 எண்ணிக்கை கழிவு நீரேற்றுநிலையம், 8 எண்ணிக்கை நீருந்துநிலையம் மற்றும் 259.600 கிமீ நீளத்திற்கு பாதாளசாக்கடை குழாய்கள்பதிக்கப்பட்டு உள்ளது. மேற்படி முடிக்கப்பட்ட பணிகள் மூலம் 18,000 பாதாளச்சாக்கடை வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு தினசரி 27MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் கட்டமைப்புகள் அனைத்தும் M/s.V.N.V.Builders(P)Ltd நிறுவனத்தாரின் மூலம். இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. மேற்கண்டநிறுவனத்தாரின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 24 பிப்ரவரி 2023 உடன் முடிவடைகிறது. மேலும் ஈரோடு மாநகராட்சியில் பாதாளசாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பணி விதிகளில் உரிய பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை.

எனவே மாநகராட்சி பாதாளசாக்கடை திட்டசேகரிப்பு அமைப்பினையும் (Collection System) கழிவு நீருந்து குழாய்களையும், கழிவு நீருந்து நிலையங்களையும், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்ய ஒப்பந்த பத்திரத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தாரோடு செய்துள்ள ஒப்பந்தத்தில் கீழ்கண்ட ஒப்பந்த நிபந்தனை கொடுக்கப்பட்டடுள்ளது.

“The contract period is for 3 years (Initial Term). If the performance of the contractor is found satisfactory during this period, the contract will be renewed by a further period of three years from the expiry of the Initial Term. Any further extension

will be at the sole discretion of the Erode City Municipal Corporation by getting prior permission from the office of the CMA, Chennai-28"

மேற்படி பாதாளசாக்கடை திட்டத்தை 01-03-2023 முதல் 29-02-2026 வரை 3 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு (O&M) பணியினை M/s.V.N.V.Builders(P)Ltd நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியை மேற்கொள்ளவும் பின்னர் இப்பணிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெற்றுக்கொள்ள அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. பணியின் அவசர அவசியம் கருதி M/s.V.N.V.Builders(P)Ltd நிறுவனத்தினர் மேலும் 3 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு (O&M) பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ-4-2746-2018**

**321. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**22.)** ஈரோடு மாநகராட்சியின் மண்டலம்-4க்குட்பட்ட வார்டு எண்.43ல் வளையக்கார வீதி பகுதியில் அமைந்துள்ள பிரதான சாலையான கச்சேரி வீதி அமையப் பெற்றுள்ளது. இந்நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திருமகன் ஈ.வெ.ரா. அவர்கள் கடந்த 04.01.2023 அன்று உடல்நலக் குறைவால் காலமானார்.

எனவே மறைந்த அன்னாரது நினைவாக அவர் இல்லம் அமைந்துள்ள கச்சேரி வீதி சாலையை திருமகன் ஈ.வெ.ரா. சாலை என பெயர் சூட்ட ஈரோடு மாமன்ற மாண்புமிகு மேயர் திருமதி. சு. நாகரத்தினம் அவர்களால் 05.01.2023ல் கோரிக்கை கடிதம் அளிக்கப்பட்டது. மேலும் 06.01.2023ம் தேதியன்று அரசினரின் பரிசீலணைக்கு சமர்ப்பித்ததின் பேரில் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு தீர்மானம் வைத்திட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை சென்னை, அவர்களது கடிதம் எண். 320/(மா.ந.6)2023-1 நாள் 10.01.2023-இல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே கச்சேரி வீதி சாலையை திருமகன் ஈ.வெ.ரா சாலை என பெயர் சூட்ட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக் குறிப்பு-</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். இ3/60/2023**

**322. கச்சேரி வீதி சாலையை திருமகன் ஈ.வெ.ரா. சாலை என பெயர் சூட்டிட ஏகமனதாக இம்மாமன்றம் தீர்மானிக்கின்றது.**

**இடம்- ஈரோடு** **மேயர்.**

**நாள். 10.01.2023** **ஈரோடு மாநகராட்சி.**

**ஈரோடு**